முருகப்பெருமான் துணை

**மகான் ஜனக்குமாரர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

11.09.2021, சனிக்கிழமை

1. கருணை கொண்டு உலகினில்
கந்த வேலன் சக்தியாக வந்த
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அகிலமதில் உன் பெருமை கூறியே
2. கூறியே பிலவ வேங்கை திங்கள்
குறைவிலா இருபானாற் திகதி காரி வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 26ம் நாள், 11.09.2021, சனிக்கிழமை)
கூறிடுவேன் ஜனக்குமாரர் யானும்
குருவரங்கன் கேட்க துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை உலக நலம்பெற உரைப்பேன்
அறமாக கலியினில் குருபக்தி
ஆசிபெற அரங்கன் தூண்டலில்
அகிலமெங்கும் பெருகி இனிதே
4. இனிதே உலக மக்களுக்கு
எண்ணமதில் தெளிவும் திடமும்
துணிவுபட தரும குணமும் பக்குவமும்
துயர் வெல்லும் ஆற்றலும் பெருகும்
5. பெருகவே அரங்கன் வழிநடத்தும்
பெருமை மிக்க தொண்டர்படைகள்
வருமுலகில் உலகை மாற்றுகின்ற
வல்லமைதன்னை படைத்து சிறக்கும்
6. சிறக்கவே அரங்கன் தேடலாக
சேவையில் சிறந்து வரும் மக்கள்
அறத்தின் துணைபட உள்ள மக்கள்
ஆறுமுகனார் வழிபாடு செய்யும் மக்கள்
7. மக்களென அனைத்து பேரும்
மண்ணுலகில் ஞானவழித் தேறி
தேக்கமின்றி நல்லுலகம் படைக்க
தெய்வ பலமும் அடைந்துயர்வர்
8. உயர்வான ஞான மார்க்கமாம்
உண்மை நெறி காட்டும் அரங்கன்
தயவான சன்மார்க்கம் தன்னை
தரணியோர் ஏற்றுவிட போதும்

9. போதுமான வளர்ச்சி மாற்றம்
பேரிடரை வெல்லும் ஆற்றல்
பூதலமே அடைந்து சிறக்கும்
பெரும் பாதுகாப்பாய் உலகம் மாறும்

10. மாறுதலை உலகம் அடைந்து
மாதவசிகள் கொண்ட பூமியாக
ஆறுமுகன் தலைமை கண்டு
அகிலம் ஞான ஆட்சிபெற வேண்டி

11. வேண்டியே அவதாரம் கண்டு
வேலவன் சக்தியான அரங்கன்
தொண்டும் சேவையும் வளரவே
தேசமெங்கும் ஞான ஆட்சி மலரும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—